# மழலையர்கள் பாடுவதற்குரிய
# 114 பாடல்களின் தொகுப்பு

தொகுத்தவர் - பொள்ளாச்சி நசன்

01

தமிழே வணக்கம்
தாயே வணக்கம்
அமிழ்தே வணக்கம்
அருள்வாய் எனக்கும்

02

பள்ளி செல்லப் போகிறேன்
பாடம் படிக்கப் போகிறேன்
படித்து எழுதி நானுமே
பாரில் உயரப் போகிறேன்

03

பாப்பா பாப்பா கைவீசு
பைந்தமிழ் படிக்க கைவீசு
ஒற்றுமை ஓங்க கைவீசு
உண்மை பேசக் கைவீசு

04

தட்டு தட்டு கை தட்டு
தம்பிப் பாப்பா கை தட்டு
மொட்டு கையை நீ தட்டு
முத்தம் தருவேன் கைதட்டு

05

பட்டாம் பூச்சி பறக்குது பார்
பள்ளிக் கூடம் திறக்குது பார்
விட்ட பாடம் தொடங்குது பார்
விடுமுறை எல்லாம் கழிந்தது பார்

6

சிட்டுக் குருவி இங்கே பார்
சிறகை விரிக்கும் அழகைப் பார்
பட்டுப் போன்ற மேனியை
படபடக்கும் அழகைப் பார்

07

பெரிய யானை வந்தது
சிறிய கண்ணால் பார்த்தது
அகன்ற காதை ஆட்டியே
அசைந்து அசைந்து நடந்தது

08

அம்மா அம்மா தமிழம்மா
அமிழ்தம் உன்றன் மொழியம்மா
அன்புப் பிள்ளை நானம்மா
அருள்வாய் எனக்கும் நீயம்மா

09

கதிரவன் எழுவான் கிழக்கு
கடமை முடித்தால் மேற்கு
இதுவே இயற்கை வழக்கு
இதுபோல் உன்னைப் பழக்கு

10

கிளியே கிளியே கிளியக்கா
கிளையில் தாவுது  குரங்கக்கா
கிளியும் சொல்லுது அக்கக்கா
கிள்ளை மொழியே இனிதக்கா

11

அம்மா சொல்லும் மாடு
அன்னை நிலமே நாடு
சும்மா இருந்தால் கேடு
தூய தமிழில் பாடு.

12

ஒன்றிரண்டு சொல்லு
ஓடி வந்து நில்லு
ஏடெடுத்துக் கல்லு
என்றும் பள்ளி செல்லு

13

ஊஞ்சல் ஆட ஆசையா
உடனே இங்கே ஓடிவா
பாடிப் பாடி ஆடலாம்
பறந்து பறந்து ஆடலாம்

14

பள்ளிக்கூடம் செல்லலாம்
பாடம் நன்றாய்ப் படிக்கலாம்
எண்ணும் எழுத்தும் கற்கலாம்
ஏற்றமாக வாழலாம்

15

ஒன்று இரண்டு மூன்று
உண்மை அன்பை வேண்டு
நான்கு ஐந்து ஆறு
நல்ல சொல்லைக் கூறு
ஏழு எட்டு ஒன்பது
எண்கள் சரியாய் எண்ணிடு
பத்து பத்து பத்து
படிக்கும் அறிவே சொத்து

16

முத்தமிழ் மொட்டே சாய்ந்தாடு
முத்த மழையே சாய்ந்தாடு
முத்தின் ஒளியே சாய்ந்தாடு
தித்திக்கும் தேனே சாய்ந்தாடு

17

அம்மா நல்ல அம்மா
ஆசையுள்ள அம்மா
என்னை விட்டு அம்மா
இருக்க மாட்டாங்க சும்மா

18

பள்ளி செல்ல விரும்பு
பாடம் வெல்லக் கரும்பு
படித்து விட்டுத் திரும்பு
பண்ண வேண்டாம் குறும்பு

19

குட்டி முயல் ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது
தொட்டுப் பிடிக்க ஓடினேன்
தாவிக் குதித்து ஓடுது

20

குவாக் குவாக் வாத்து
குட்டைக் காலு வாத்து
குதித்து ஓடும் வாத்து
குளத்தில் நீந்தும் வாத்து

21

மழையே மழையே வா வா
மண்ணை நனைக்க வா வா
மழலைப் பாப்பா மகிழவே
மழையே மழையே வா வா

22

அம்மா என்னைப் பாரம்மா
அன்புப் பிள்ளை நானம்மா
அழகாய்ப் பாடுவே னம்மா
அனைத்தும் தமிழில் தானம்மா

23

எங்கள் வீடு தமிழ் வீடு
எங்கள் நாடு தமிழ் நாடு
எங்கும் எதிலும் தமிழ் பேசும்
எங்கள் மக்கள் தமிழ் மக்கள்

24

காக்கா பாரு பாப்பா
கருப்பு நிறம் பாப்பா
காக்கா மனசோ வெளுப்பு
கற்றுக் கொள்ளு படிப்பு

25

தமிழே எங்கள் மொழியாகும்
தாயைப் போன்ற துணையாகும்
என்றும் தமிழைக் கற்றிடுவோம்
ஏற்றம் பெற்றே வாழ்ந்திடுவோம்

26

சின்னஞ் சிறிய பொம்மை
சிரிக்கும் அழகுப் பொம்மை
கண்ணைக் கவரும் பொம்மை
காசு கேட்கா பொம்மை

27

இடி இடிக்குது டப டப
மழை பொழியுது பட பட
மரம் முறியுது மட மட
முரசு அடிக்குது டம டம

28

கம்பைப் போல முருங்கைக் காய்

கல்லைப் போல பறங்கிக்காய்

பாம்பைப் போல புடலங்காய்

பானை போல பூசுனைக்காய்

விரல்கள் போல வெண்டைக்காய்

விதையே இல்லா வாழைக்காய்

29

அம்மா என்பது மூன்றெழுத்து

அப்பா என்பதும் மூன்றெழுத்து

அக்கா என்பதும் மூன்றெழுத்து

தங்கை என்பதும் மூன்றெழுத்து

மாமன் என்பதும் மூன்றெழுத்து

அத்தை என்பதும் மூன்றெழுத்து

உறவுச் சொற்கள் பெரும்பாலும்

நமது தமிழில் மூன்றெழுத்து

30

பச்சைக் கிளி பேசுது கீ கீ கீ

குயில் அங்கே கூவுது கூ கூ கூ

ஆடு என்னை அழைக்குது மே மே மே

நாயும் பாய்ந்து குரைக்குது லொள் லொள் லொள்

31

எறும்புக் கூட்டம் போலவே
இணைந்து வாழப் பழகுவோம்
கூடி வாழும் வாழ்விலே
கோடி கோடி நன்மையே

32

குட்டி நாயும் குரைக்குது
குட்டை வாலை ஆட்டுது
எட்டி எட்டிப் பாயுது
எங்கும் ஓடி வருகுது

33

மயிலே மயிலே நீ ஆடு
வண்ணத் தோகை விரித்தாடு
ஒயிலாய் ஒரு கால் எடுத்தாடு
ஓடும் முகிலைக் கண்டாடு

34

காலையில் எழுந்ததும் குளித்திடுவேன்
கல்விக்கூடம் சென்றிடுவேன்
தாய்மொழிக் கல்வியைக் கற்றிடுவேன்
தமிழால் நானும் உயர்ந்திடுவேன்

35

பஞ்சு மிட்டாய் இனிப்பு
பாகற் காயோ கசப்பு
கடல் நீரோ உவர்ப்பு
களிப் பாக்கு துவர்ப்பு
வடுமாங்காய் புளிப்பு
வற மிளகாய் கார்ப்பு
ஆறு சுவையும் சுவைத்திடுவோம்
ஆடிப்பாடி மகிழ்ந்திடுவோம்

36

கருப்பு யானை பெரியது
கட்டெறும்போ சிறியது
இமயமலை பெரியது
இந்தக் கல்லோ சிறியது

37

எனக்குக் கைகள் இரண்டு

எனக்குக் கால்கள் இரண்டு

எனக்குக் கண்கள் இரண்டு

எனக்குக் காதுகள் இரண்டு

மூக்கு மட்டும் ஒன்று

வாயும் கூட ஒன்று

38

எங்கள் வீடு பாருங்கள்

எளிய வீடு பாருங்கள்

சுற்றும் முற்றும் பாருங்கள்

சற்று நின்று பாருங்கள்

எங்கும் குப்பை இல்லையே

ஈயும் கொசுவும் இல்லையே

39

அணிலே அணிலே ஓடிவா

அழகு அணிலே ஓடிவா

கொய்யா மரம் ஏறிவா

குண்டுப் பழம் கொண்டு வா

பாதிப் பழம் உன்னிடம்

பாதிப் பழம் என்னிடம்

கூடிக் கூடி இருவரும்

கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

40

மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசையுள்ள பூனைக்குட்டி
வவ் வவ் நாய்க்குட்டி
வலை ஆட்டும் நாய்க்குட்டி
மே மே ஆட்டுக் குட்டி
மேயப் போகும் ஆட்டுக்குட்டி
பாப்பா பாப்பா படு சுட்டி
பாட்டுப் பாடலாம் கைதட்டி

41

சதுரமான இருக்கை பார்
சாய்ந்து அமர உதவுமே
வட்டமான தட்டிலே
வகை வகையாய் உண்ணலாம்
கரும்பலகை செவ்வகம்
கணக்குப்போட உதவுமே
சதுரம் வட்டம் செவ்வகம்
கணிதப்பாட உருவமே

42

அழாமல் இருக்கணும் சின்னப் பாப்பா அ அ அ
ஆடிப்பாடனும் சின்னப் பாப்பா ஆ ஆ
இலையில் சோறு போட்டிட வேண்டும் இ இ இ
ஈ யை நீயும் ஓட்டிட வேண்டும் ஈ ஈ
உண்மையாகப் பேசிட வேண்டும் உ உ உ
ஊஞ்சல் ஆடி மகிழ்ந்திட வேண்டும் ஊ ஊ
எண்ணிப் பார்த்து எதையும் செய்யனும் எ எ எ
ஏற்றத் தாழ்வு ஒதுக்கிட வேண்டும் ஏ ஏ
ஐயம் நீங்கக் கற்றிட வேண்டும் ஐ ஐ
ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும் ஒ ஒ ஒ
ஓடியாடி உடலை வளர்ப்பாய் ஓ ஓ
ஔவை சொல்லை மறந்திட வேண்டாம் ஔ ஔ ஔ

43

அன்பாய் நானும் இருப்பேனே
ஆசையாகப் படிப்பேனே
இனிய சொற்கள் சொல்வேனே
ஈவிரக்கம் கொள்வேனே
உழைத்தே நானும் பிழைப்பேனே
ஊர்தியில் சரியாய்ச் செல்வேனே
என்றும் தமிழைப் படிப்பேனே
ஏற்றத் தாழ்வினை மறப்பேனே
ஐநா சபைக்கும் செல்வேனே
ஒற்றுமையாக வாழ்வேனே
ஓடும் நதிகளை இணைப்பேனே

ஔவையாரை மதிப்பேனே

ஆஃறினை உயிர்களை மதிப்பேனே

44

அணிலே அணிலே ஓடிவா

அழகு அணிலே ஓடிவா

கொய்யா மரம் ஏறி வா

குண்டுப் பழம் கொண்டு வா

பாதிப்பழம் உன்னிடம்

பாதிப்பழம் என்னிடம்

கூடிக்கூடி இருவரும்

கொறித்துக் கொறித்துத் தின்னலாம்

45

தோ தோ நாய்க்குட்டி

துள்ளி வாவா நாய்க்குட்டி

உன்னைத்தானே நாய்க்குட்டி

ஓடி வாவா நாய்க்குட்டி

46

கழுத்தில் மணியைக் கட்டுவேன்

கறியும் சோறும் போடுவேன்

இரவில் இங்கே தங்கிடு

எங்கள் வீட்டைக் காத்திடு

47

ஊஞ்சல் அழகு ஊஞ்சலாம்
உயர்ந்து தாழும் ஊஞ்சலாம்
இறக்கை இன்றி வானிலே
எடுத்துச் செல்லும் ஊஞ்சலாம்
உந்தி உந்தி ஆட்டினால்
உயர உயரப் போகுமாம்
ஊக்கம் உள்ள மாந்தரே
உயர்வு காண்பார் வாழ்விலே

48

குட்டிக் குரங்கு வருகுது
சுட்டித் தனங்கள் செய்யுது
நெட்டை வாலை நீட்டியே
நெடிய தூரம் தாவுது

49

மலையில் கூடி வாழுது
மரங்கள் ஏறி இறங்குது
கிளையை விட்டுக் கிளையிலே
குதித்துத் தாவி மகிழுது

குரங்கைப்போல குதிப்பது
குழந்தை நமக்கு நல்லதே
குரங்குக் குட்டி போலவே
கூடி ஆடி மகிழுவோம்

50

குண்டு குண்டாய் எழுதுவேன்
கோணல் இன்றி எழுதுவேன்
கண்டு மகிழும் வண்ணமே
கன்னித் தமிழில் எழுதுவேன்

முத்து முத்தாய் எழுதுவேன்
முயற்சி செய்து எழுதுவேன்
பத்து வரிகள் நாளுமே
பயிற்சி செய்து எழுதுவேன்

நேர்த்தியாக எழுதுவேன்
நிறுத்தி நன்கு எழுதுவேன்
பார்த்தவர்கள் எளிதிலே
படிக்குமாறு எழுதுவேன்

51

கண் இரண்டால் பார்க்கலாம்
காது இரண்டால் கேட்கலாம்
கை இரண்டால் செய்யலாம்
கால் இரண்டால் நடக்கலாம்
மூக்கு ஒன்றால் முகரலாம்
முகம் ஒன்றால் மலரலாம்
வாய் ஒன்றால் பேசலாம்
வளர நாளும் படிக்கலாம்

52

கா கா என்னும் காக்கை பார்
கொக் கொக் என்னும் கோழி பார்
குக்கூ என்னும் குயிலைப் பார்
குர் குர் என்னும் குரங்கைப் பார்
ஒலிக்கும் ஒலியே பெயராகும்
இதுவே தமிழின் வளமாகும்

53

பால் பால்,  என்ன பால்,  மாட்டுப்பால்

என்ன மாடு   பசுமாடு

என்ன பசு  நாட்டுப் பசு

என்ன நாடு  தமிழ்நாடு

என்ன தமிழ் செந்தமிழ்

54

பசிக்கு வேண்டும் சோறு

பயிர் செழிக்க ஆறு

வசிக்க நல்ல வீடு

வாய் மணக்கப் பாடு

கனி கொடுக்கும் மரம்

கொண்டைக்குப் பூச்சரம்

55

தமிழே அமுதே நீ வாழ்க

தண்டமிழ் மொழியே நீ வாழ்க

தேனே சுவையே நீ வாழ்க

தென்றல் காற்றே நீ வாழ்க

பொதிகை பிறந்த பூந்தமிழே

பூமகளே உன் புகழ் வாழ்க

இமையம் போலே நீ உயர்ந்து

என்றும் புகழாய் வாழியவே

56

அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
செல்லப்பிள்ளை நான்
அண்ணனுக்கும் தம்பிக்கும்
அன்புப் பிள்ளை நான்
ஆசிரியர் அனைவருக்கும்
ஆசைப் பிள்ளை நான்
நாட்டில் உயர நல்ல தமிழைப்
படிக்கும் பிள்ளை நான்

57

வானில் நீல வண்ணம் பார்
வயலில் பச்சை வண்ணம் பார்
பாலில் வெள்ளை வண்ணம் பார்
பவழம் சிவப்பு வண்ணம் பார்
காக்கை கரிய வண்ணம் பார்
ஐந்து வண்ணக் கிளியைப் பார்
ஏழு வண்ண வில்லைப் பார்

58

மண்அரிப்பைக் காத்திடும்
மழையை நமக்குத் தந்திடும்
உயிரினங்கள் உண்டிட
உயர் கனிகள் தந்திடும்
நிழல் கொடுத்து நின்றிடும்
நிறைய காற்று தந்திடும்
காட்டு மரங்கள் பலவகை
கருத்தாய் நாமும் வளர்க்கலாம்

59

எதற்கும் உண்டு விலை
சிலந்தி பின்னும் வலை
கல்லைச் செதுக்கச் சிலை
ஆடல் பாடல் கலை

செல்வம் சேர்ந்தால் வளம்
உண்மைச் செல்வம் நலம்
மொழியைக் காக்கும் நிலம்
ஒன்றே மாந்தர் குலம்

60

மாட்டின் வாலோ நெட்டை
ஆட்டின் வாலோ குட்டை
நாயின் வாலோ மேலே
நரியில் வாலோ கீழே
அணிலின் வாலோ கற்றை
எலியின் வாலோ மொட்டை
குரங்கில் வாலே நீளம்
குருவி வாலே நீலம்.

61

மெலிதாய் இருப்பது தொலி
கெட்டியாய் இருப்பது தோல்
கடினமாய் இருப்பது தோடு
உடைய மறுப்படு ஓடு
தேங்காயின் மட்டை சிரட்டை

62

கரிக்குச்சி தூவல் சுண்ணக்கட்டி
காட்டும் உருளை வடிவம்தான்
கூர்மை செய்த கரிக்குச்சி
கூம்பு வடிவம் காட்டுமே

63

கனசதுரக் கட்டையை
கண்டு நானும் அளந்திட
நீள அகல உயரமும்
ஒன்றுபோல இருந்தன

கனசெவ்வகக் கட்டையை
கண்டு நானும் அளந்திட
உயரம் வேறு பட்டது
உள்ளம் மகிழ்வு கொண்டது

64

இனிப்புச் சுவைக்கு மாம்பழமாம்
புளிப்புச் சுவைக்கு எலுமிச்சையாம்
உறைப்புச் சுவைக்கு மிளகாயாம்
துவர்ப்புச் சுவைக்குப் பாக்குதான்
உவர்ப்புச் சுவைக்கு உப்புக்கல்லாம்
கசப்புச் சுவைக்கு பாகற்காயாம்
ஆறு சுவைகள் இவையென்றால்
இவற்றின் கலப்போ ஆயிரமாம்

65

குயிலைப் போலக் கூவிப் பார்த்தேன்
கூவ முடிகிறது - நான்
மயிலைப்போல ஆடிப் பார்த்தேன்
ஆட முடிகிறது
மீனைப்போல நீந்திப் பார்த்தேன்
நீந்த முடிகிறது - நான்
மானைப்போல ஓடிப் பார்த்தேன்
ஓட முடிகிறது
முடியும் என்று முயன்று பார்த்தேன்
எவையும் முடிகிறது - நீயும்
முடியும் என்று முயற்சி செய்தால்
எதுதான் முடியாது ?

66

வேப்பிலையைத் தின்னலாம்
விரும்பித் துளசி தின்னலாம்
காத்திடலாம் உடல்நலம்
கருதித் தின்றால் கேடில்லை
பாகற்காயோ கசப்புத்தான்
பழகிப்போனால் இனிப்புத்தான்
நாவுக்காக வாழாமல்
நலத்துக்காக வாழுவோம்

67

முழங்கின சங்குகள்

முதல்மொழி தமிழ்என

பகர்ந்தன சங்குகள்

பிறமொழி பின்என

மொழிந்தன சங்குகள்

மலர்வது தமிழ்என

ஒலித்தன சங்குகள்

ஒளிமிகு தமிழே

ஓங்குவ தினி என.

68

பறவை பறந்து வந்தது

பட பட வென ஒலித்தது

கசடதபற என்பது போல்

காதில் ஒலியும் கேட்டது

பறவை பார்த்த பூனையும்

மியாவ் மியாவ் என்றது

பூனை ஒலி எனக்குமே

ஙஞன நமண என்றது

பூனை பார்த்த கிளியாரும்

யார் அவன் என்றது

கிளியின் குரல் எனக்குமே

யரல வழள என்றது .

சூரியன் வருவது எதனாலே
சுழலுது உலகம் அதனாலே
சந்திரன் தெரிவது எவராலே
சரியும் கதிரவன் ஒளியாலே

காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணில் படுவன அவை என்ன
கணக்கில் அடங்கா விண்மீன்கள்
கண்ணில் படுவதை நாமறிவோம்

பேரிடி மின்னல் எதனாலே
மோதுது மேகம் அதனாலே
பெருமழை பெய்வது எதனாலே
குளிருது மேகம் அதனாலே

யாரிதற்கெல்லாம் அதிகாரி
எவரும் இதற்கில்லை அதிகாரி
எல்லாம் இயல்பாய் நடக்கிறது
இதைநாம் எண்ணிட வேண்டாமோ

70

நெல்லு மூக்குக் குருவியே

நித்தம் எங்கு செல்கிறாய்

கடுகு விழிக் குருவியே

காலை எங்கு செல்கிறாய்

குட்டையான உடம்பையே

எந்தக் குளத்தில் நனைக்கிறாய்

தத்தித் தத்தி விண்ணிலே

தாவிப் பறக்கப் பார்க்கிறாய்

நீயும் நானும் நண்பர்கள்

நாளும் சேர்ந்து மகிழுவோம்

ஓடிவாயேன் குருவியே

ஒன்றாய் நாமும் பாடலாம்

71

கா கா கா கா காக்கையிடம்

காணும் ஒற்றுமை கற்றிடலாம்

கீக்கீ கீக்கீ கிளியிடமோ

கொஞ்சிப் பேசக் கற்றிடலாம்

கூக்கூ கூக்கூ குயிலிடமோ

குரலின் இனிமை கற்றிடலாம்

கொக் கொக் கொக் கொக் கோழியிடம்

குன்றாக் கடமை கற்றிடலாம்

வா வா வா நீயும் பள்ளிக்கு

வந்தால் தமிழைக் கற்றிடலாம்

72

படிப்பும் பேச்சும் இயற்றமிழ்
பாடும் பாட்டே இசைத்தமிழ்
நடிப்பும் கூத்தும் சேர்ந்ததே
நாடகத் தமிழ் ஆகுமே
இயல் இசை நாடகம்
இனிய தமிழில் உள்ளதே
நற்றமிழைக் கற்றுமே
நாடு போற்ற வாழுவோம்

73

குளிக்கும் நீர்நிலை குளம்
உண்ணும் நீர்நிலை ஊருணி
சிறிய நீர்நிலை குட்டை
பெரிய நீர்நிலை தடாகம்
மலை தரும் நீர்நிலை சுனை
அருவி விழும் நீர்நிலை மடு

74

குட்டி குட்டி எறும்புகள்
கூட்டம் கூடும் எறும்புகள்
கடுகு போல எறும்புகள்
காலால் நடக்கும் எறும்புகள்

வரிசை போட்டுச் சென்றிடும்
வழிகொடுத்து ஒதுங்கிடும்
உணவுப் பொருள் தன்னையே
உழைத்து நாளும் சேர்த்திடும்

சுற்றம் தழுவி நின்றிடும்
சற்றும் அயரா எறும்புகள்
கற்றுக் கொள்ள வேண்டுமே
ஒற்றுமையை நாமுமே

75

சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே

தேனீக்கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமை
பேணி வீட்டைக் கட்டுமே
பெரிய முயற்சி வேண்டுமே

குருவிக் கூட்டைப் பாருங்கள்
குடுக்கை போன்று பின்னியே
விரைவில் கட்டி முடிக்குமே
வேண்டும் முயற்சி என்றுமே

76

நாயின் ஒலியோ குரைத்தல்

நரியின் ஒலியோ ஊளை

குயிலின் ஒலியோ கூவல்

மயிலின் ஒலியோ அகவல்

கூகை ஒலியோ குழறல்

கிளியில் ஒலியோ மிழற்றல்

ஆந்தை ஒலியோ அலறல்

அரிமா ஒலியோ முழக்கம்

கழுதை ஒலியோ கத்தல்

ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு பெயர்

தமிழில் உண்டு உரைப்பாய்

77

வானம் கருத்தது முகிலும் பொழிந்தது

மழை மழை மழை

மேனி நனைந்தது குளங்கள் நிறைந்தன

மழை மழை மழை

மின்னல் கீற்றுகள் இடி முழக்கங்கள்

மழை மழை மழை

இன்னல் தீர்ந்தது எங்கும் குளிர்ந்தது

மழை மழை மழை

மப்பு மந்தாரம் மஞ்சின் மூட்டம்

மழை மழை மழை

தொப்பரையாய் உடை முற்றும் நனைந்தது

மழை மழை மழை

இறங்கிய நீர்ச்சரம் ஏழையின் கண்ணீர்
மழை மழை மழை
உறங்கிய உலகம் உயிர்த்தெழ இங்கே
மழை மழை மழை

78

பட்டாம் பூச்சி போலவே
பறந்து திரிய வேண்டுமே
சிட்டுக் குருவி போலவே
சிறகு விரிக்க வேண்டுமே

வண்ணக் கிளியைப் போலவே
வானில் பறக்க வேண்டுமே
எண்ணம் போகும் இடமெல்லாம்
எழுந்து பறக்க வேண்டுமே

சின்ன மீன்கள் போலவே
நீரில் நீந்த வேண்டுமே
மின்மினிகளைப் போலவே
மின்னிப் பறக்க வேண்டுமே

79

அம்மா மிகவும் நல்லவர்
ஆட்டித் தூங்கச் செய்தவர்
இளைக்கக் கண்டு அழுதவர்
ஈ யை ஓட்டி நின்றவர்
உழக்கு நெய்யை சோற்றிலே
ஊற்றிப் பிசைந்து கொடுத்தவர்
எடுத்துத் தூக்கி அணைத்தவர்
ஏனை கட்டிப் போட்டவர்
ஐயன் அப்பன் என்றவர்
ஒப்பனைகள் செய்தவர்
ஓயாதென்னைக் காப்பவர்
ஒளவைக் கதையைச் சொன்னவர்

80

ஆடு பாம்பே வளைந்தாடு பாம்பே
அனைத்தும் தமிழ் ஆகுமென்று ஆடுபாம்பே - இங்கே
அனைத்தும் தமிழ் ஆகுமென்று ஆடுபாம்பே

ஆட்சி மொழி பயிற்றுமொழி தமிழ்நாட்டில்
ஆலையத்து மொழியதும் தமிழ்நாட்டில்
பேச்சுமொழி எழுத்துமொழி அத்தனையும்
பேரிடிபோல் ஆனதிங்கே தமிழ்நாட்டில் (ஆடுபாம்பே)

எத்தனையோ மொழிக்கலப்பு இருக்குதிங்கே - அந்த
எத்தர்களின் செயற்பாடோ பெருகுதிங்கே
அத்தனையும் உடைத்துத் தமிழ் வளர்த்திடவே - நீ
அனைத்துத் தமிழ்ப் பள்ளியிலும் ஆடுபாம்பே. (ஆடுபாம்பே)

81

இரும்புத் துண்டு கிடந்தது
எடுத்து வீசி எறிந்தனர்
கருமான் ஒருவன் கண்டனன்
காய்ச்சிக் கத்தி செய்தனன்
எலும்புத் துண்டு கிடந்தது
எடுத்தெறிந்து சென்றனர்
எலும்புக்காரன் கண்டனன்
எடுத்துப் பிடிகள் செய்தனன்
தகரம் ஒன்று கிடந்தது
தூக்கி வீசி எறிந்தனர்
தகரக்காரன் கண்டனன்
தகரக் குவளை செய்தனன்
துரும்பும் நமக்குப் பயன்படும்
தோன்றும் பொருள்கள் யாவுமே
அறிந்துள்ளார்க்குப் பயன்படும்
அறிவில்லார்க்குப் பயனில்லை

82

கணிப்பொறியாம் கணிப்பொறி
கணக்குப்போடும் கணிப்பொறி
மணித்துளியில் நூறுவகை
மாற்றம் செய்யும் கணிப்பொறி
அச்சு வேலை செய்யலாம்
அழகுப் பொம்மை போடலாம்
வேண்டும் பொழுது மகிழ்ந்திட
விளையாட்டும் ஆடலாம்
அறிவு உலகின் நுட்பங்கள்
அறிய இதனைக் கண்டனர்
இளைய தம்பி இதனை நீ
இன்றே இயக்கப் பழகிடு

83

பந்தைத் தூக்கிப் போடு
பசிக்கப் பசிக்க ஆடு
மூச்சை இழுத்துப் பழகு
முகத்தில் தோன்றும் அழகு
நீளம் உயரம் தாண்டு
நீ வளர்வாய் நீண்டு
நாளும் நீரில் நீந்து
நல்ல மார்பை ஏந்து

முன்னும் பின்னும் வளை
முகத்தில் தோன்றும் களை
மாலை வெய்யில் குளி
மடிமை என்றும் ஒழி.

84

மாம் பழமாம் மாம்பழம்
மஞ்சள் நிற மாழ்பழம்
மா மரத்து மாம்பழம்
மாமா தந்த மாம்பழம்
எங்கள் வீட்டு மாம்பழம்
எங்கள் நாட்டு மாம்பழம்
தாய்நாட்டு மாம்பழம்
தமிழ்நாட்டு மாம்பழம்

85

கொட்டும் மழையும் ஓய்ந்ததே
கோடை வெயில் தகிக்குதே
சுற்றிச் சுழலும் மின்விசிறி
சுகமாய்க் காற்றைத் தருகிறதே

86

கொய்யா மரக் கிளையிலே

குக்கூ பாடுது குயில் கூட்டம்

மாமரத்துக் கிளையிலே

கொஞ்சிப் பேசுது கிளிக் கூட்டம்

பச்சை பசும் புல்வெளியில்

துள்ளியோடுது மான் கூட்டம்

பூத்துக் குலுங்கும் தோட்டத்தில்

தோகைமயிலின் ஒயிலாட்டம்

அரங்கேற்றமாகுது ஆட்டம் பாட்டம்

அனுமதி இங்கே இலவசம்

87

சிட்டே சிட்டே பறந்து வா

சிறகை சிறகை அடித்து வா !

கொட்டிக் கிடக்கும் மணிகளை

கொத்திக் கொத்தித் தின்ன வா !

ஆற்று நீரில் குளிக்கிறாய்

அழகாய்த் தூளி ஆடுகிறாய் !

சேற்று வயலில் அமர்கிறாய்

திறந்த வெளியில் திரிகிறாய் !

உன்னைப் போலப் பறக்கணும்

உயர உயர செல்லணும் !

என்னை அழைத்துச் சென்றிடு

ஏற்ற இடத்தைக் காட்டிடு

88

தாத்தா வைத்த தென்னையுமே
தலையால் இளநீர் தருகிறதே !
பாட்டி வைத்த கொய்யாவும்
பழங்கள் நிறையக் கொடுக்கிறதே !
அப்பா வைத்த மாஞ்செடியோ
அல்வா போல பழம் தருது !
அம்மா வைத்த முருங்கையுமே
அளவில்லாமல் காய்க்கிறது !
அண்ணன் வைத்த மாதுளையோ
கிண்ணம் போல பழுக்கிறது !
சின்னஞ்சிறுவன் நானுமொரு
செடியை நட்டு வளர்ப்பேனே

89

அம்மா இங்கே வா! வா!
ஆசை முத்தம் தா! தா!
இலையில் சோறு போடு
ஈயை தூர ஓட்டு!
உன்னைப் போன்ற நல்லவர்
ஊரில் எவரும் இல்லையே
என்னால் உனக்கு தொல்லை
ஏதும் இனி இல்லை
ஐயம் இன்றி சொல்வேன்

ஒற்றுமை என்றும் பலமாம்

ஓதும் செயலே நலமாம்

ஔவை சொன்ன மொழியாம்

அஃதே எனக்கு வழியாம்

90

மழையே மழையே வா வா

மரங்கள் வளர வா வா

உலகம் செழிக்க வா வா

உழவர் மகிழ வா வா

குளங்கள் நிறைய வா வா

குடைகள் பிடிக்க வா வா

ஆறு ஓட வா வா

அழைத்தேன் மழையே வா வா

91

கைவீசம்மா கைவீசு

கடைக்குப் போகலாம் கைவீசு

பொருள்கள் வாங்கலாம் கைவீசு

பிறர்க்கும் கொடுக்கலாம் கைவீசு

92

காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா

குருவி கொண்டைக்குப் பூ கொண்டு வா

கிளியே கிண்ணத்தில் பால் கொண்டு வா

கொக்கே குழந்தைக்கு தேன் கொண்டு வா

93

சேவலைப் பார் சேவலைப் பார்

சிப்பாயைப் போல - அது

கூவுது பார் கூவுது பார்

கொம்பொலி போல.

வெற்றி நடை போடுது பார்

வீரனைப் போல - போரில்

சுற்றி வந்து அடிக்குது பார்

சூரனைப் போல.

வாலையாட்டும் வண்ணத்தைப் பார்

வானவில் போல - அதி

காலையிலே எழுப்பிடும் பார்

காவலன் போல.

94

கசட தபற வல்லினம்
கசக்கும் வேம்பு மருந்தினம்
ஙஞண நமன மெல்லினம்
ங ப்போல் உறவைக் காக்கணும்
யரல வழள இடையினம்
இரவில் உணவு குறையணும்
தமிழில் மெய்கள் மூவினம்
தமிழர் எல்லாம் ஓரினம்.

95

புன்னகை என்றும் புரிந்திடு
பொய்களை எதிர்த்து வென்றிடு
அனைத்து மொழியும் கற்றிடு
அமுதத் தமிழில் பேசிடு
கூடா நட்பை வெறுத்திடு
கூடி நீயும் வாழ்ந்திடு
விடாமல் முயற்சி செய்திடு
வெற்றிக் கனியைப் பறித்திடு

96

பள்ளி பள்ளி பள்ளி
பாடம் படிக்கப் பள்ளி
துள்ளி துள்ளி துள்ளி
விளையாடுவோம் துள்ளி
வெள்ளி வெள்ளி வெள்ளி
அக்கா கொலுசு வெள்ளி
அல்லி அல்லி அல்லி
அழகு மலரே அல்லி.

97

பெற்றோர் காத்தல் நம்கடனே
பெரிதாய்க் கற்றல் நம்கடனே
உற்றார் போற்ற வாழ்ந்திடுதல்
உலகின் முதன்மைக் கடனாகும்.
வெற்றுப் பேச்சில் காலந்தான்
வீணாய்ப் போகும் அதனாலே
குற்றம் இல்லா வாழ்வுதனைக்
குறிக்கோளுடனே வாழ்ந்திடுவோம்.

98

சிட்டுக் குருவி வானிலே

சிறகடித்துப் பறக்குது

கொட்டும் அருவி மலையிலே

சலசலத்துக் கொட்டுது

குருவிபோல நாமுமே

கூடிவாழப் பழகுவோம்

அருவி போல நாமுமே

அனைவர் போற்ற வாழுவோம்.

99

அன்பே அமுதே எழுந்திடு

அன்னைத் தமிழை படித்திடு

அறிவாய் நீயும் வளர்ந்திடு

அறியாமை மீது போர்த்தொடு

உடும்பாய்க் கொள்கை பிடித்திடு

உயர்வு தாழ்வு சமனிடு

உரிமை மீட்கத் துணிந்திடு

உண்மை யாக வாழ்ந்திடு.

காய்ச்சிய நீரைக் குடி குடி

கரும்பை நன்றாய்க் கடி கடி

தாய்மொழிக் கல்வி படி படி

தடையாம் சுவரை இடி இடி

காற்றில் மாசு வடி வடி
மண்ணில் கழிவு துடி துடி
சாதிப் பாம்பை அடி அடி
துணிந்து செயலை முடி முடி.
கதிரவன் வந்தான் எழுந்திடு
கண்ணை நன்றாய்த் திறந்திடு
காலைக் கடனை முடித்திடு
கடமை செய்யத் துணிந்திடு
கல்விக் கரும்பைக் கடித்திடு
கசடை நீக்கிப் படித்திடு
கலைகள் அனைத்தும் கற்றிடு
காரிருள் நீக்கி வென்றிடு.

100

ஒன்று யார்க்கும் தலை ஒன்று
இரண்டு முகத்தில் கண் இரண்டு
மூன்று முக்காலிக்குக் கால் மூன்று
நான்கு நாற்காலிக்குக் கால் நான்கு
ஐந்த் ஒருகை விரல் ஐந்து
ஆறு ஈயின் கால் ஆறு
ஏழு வாரத்தின் நாள் ஏழு
எட்டு சிலந்தியின் கால் எட்டு
ஒன்பது தானியம் வகை ஒன்பது
பத்து இருகை விரல் பத்து

101

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு
அங்கே துள்ளிக்குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு
உடன் அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப்பசு
பாலை நன்றாய் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு
மடிமுட்டி குடிக்குது கன்றுக்குட்டி

102

கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
மிட்டாய் வாங்கலாம் கை வீசு
மெதுவாய்த் தின்னலாம் கை வீசு
அப்பம் வாங்கலாம் கை வீசு
அமர்ந்து தின்னலாம் கை வீசு
பழங்கள் வாங்கலாம் கை வீசு
பகிர்ந்து தின்னலாம் கை வீசு

103

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மீது ஏறி வா
மல்லிகைப் பூ கொண்டு வா

104

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு
இரண்டும் இரண்டும் நான்கு
இனிமேல் பரிசு வாங்கு
மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு
நான்கும் நான்கும் எட்டு
நன்றாய் பாடு பாட்டு
ஐந்தும் ஐந்தும் பத்து
அன்பே நமது சொத்து

105

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக் கிளியே சாய்ந்தாடு
தித்திக்கும் தேனே சாய்ந்தாடு
தெவிட்டாத் தமிழே சாய்ந்தாடு

மயிலே குயிலே சாய்ந்தாடு
மாடப் புறாவே சாய்ந்தாடு
கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
காய்ச்சிய பாலே சாய்ந்தாடு

குத்து விளக்கே சாய்ந்தாடு
குட்டி நிலவே சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு
காலம் வருமே சாய்ந்தாடு

106

மாம்பழமாம் மாம்பழம்
மல்கோவா மாம்பழம்
தித்திக்கும் மாம்பழம்
தேன் போன்ற மாம்பழம்

உங்களுக்கும் வேண்டுமா
ஓடி இங்கே வாருங்கள்
ஒன்று கூடி தின்னலாம்
உறவுடனே வாழலாம்

107

ஆனை ஆனை

அழகு ஆனை

கட்டிக் கரும்பை

முறிக்கும் ஆனை

காவேரி நீரை

கலக்கும் ஆனை

கொம்பு முளைக்கும்

குட்டி யானை

108

வட்டமான தட்டு

தட்டு நிறைய லட்டு

லட்டு மொத்தம் எட்டு

எட்டில் பாதி விட்டு

எடுத்தான் மீதம் கிட்டு

மீதம் உள்ள லட்டு

முழுதும் தங்கை பட்டு

போட்டால் வாயில் பிட்டு

கிட்டு நான்கு லட்டு

பட்டு நான்கு லட்டு

மொத்தம் தீர்ந்த தெட்டு

மீதம் காலித் தட்டு

109

வானத்திலே திருவிழா
வழக்கமான ஒருவிழா
இடியிடிக்கும் மேகங்கள்
இறங்கிவரும் தாளங்கள்
மின்னலொரு நாட்டியம்
மேடைவான மண்டபம்
துறலொரு தோரணம்
தூயமழை காரணம்
எட்டுதிக்கும் காற்றிலே
ஏகவெள்ளம் ஆற்றிலே
தெருவெங்கும் வெள்ளமே
திண்ணையோரம் செல்லுமே
தவளைகூட பாடுமே
தண்ணீரிலே ஆடுமே
அண்டவெளி வேடிக்கை
ஆண்டுதோறும் வாடிக்கை.

110

மழைவருது மழைவருது
நெல்லு குத்துங்க
முக்காப்படி அரிசிபோட்டு
முறுக்கு சுடுங்க
தேடிவரும் மாப்பிள்ளைக்கு

எடுத்து வையுங்க
சும்மாவரும் மாப்பிள்ளைக்கு
சூடு வையுங்க.

111

குள்ள குள்ள வாத்து
குவா குவா வாத்து
மெல்ல உடலைச் சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
ஆடி ஆடி நடக்கும்
அழகுமணி வாத்து

112

காக்கா காக்கா
கண்ணுக்கு மை கொண்டுவா
குருவி குருவி
கொண்டைக்குப் பூ கொண்டுவா
கிளியே கிளியே
கிண்ணத்தில் பழம் கொண்டுவா
பசுவே பசுவே
குழந்தைக்குப் பால் கொண்டுவா

113

சின்னச் சின்ன பூனையாம்
சீறிப் பாயும் பூனையாம்
கன்னங்கரியப் பூனையாம்
கருப்பு மீசைப் பூனையாம்
இரவில் சுற்றும் பூனையாம்
எலியைப் பிடிக்கும் பூனையாம்
புலியைப் போன்ற பூனையாம்
புத்திசாலிப் பூனையாம்.

114

தோசை அம்மா தோசை
வட்ட வட்ட தோசை
அரிசி மாவும் உளுந்து மாவும்
அரைச்சு சுட்ட தோசை

அப்பாவிற்கு நான்கு
அண்ணனுக்கு மூன்று
அக்காவுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று

---

---

அன்புடையீர், வணக்கம்

தமிழக அரசின் பள்ளிகளில் தமிழ் இல்லையே, அயற்சொற்கள் கலந்து கற்கின்றனரே என்று வருந்தி தமிழ்ப் பள்ளியைத் தொடங்கினார் திருமிகு பெருஞ்சித்திரனார். அந்தப் பள்ளி ஆண்டு விழாவிற்குச் சென்ற திரு. தியாகு இது தமிழ் வளர்க்கும் கருவி போல உள்ளதே என்று தமிழ்ப் பள்ளியைத் தான் தொடங்கியதோடு, விருப்புடையவரைத் தொடங்க வைத்து இணைத்தார். 25 பள்ளிகளுக்கு மேல் தொடங்கப்பட்டன. பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி தருவதற்காக, கோபிக்குச் சென்ற என்னை அந்தப் பள்ளி ஆசிரியர்களின் ஈடுபாடும், அதன் உயரிய நோக்கமும் ஈர்த்தது. விளைவு, தாய்த் தமிழ்ப் பள்ளியை நானும் தொடங்கினேன். 100 க்கும் மேற்பட்ட பள்ளிகள் தமிழகம் முழுவதும் தொடங்கப்பட்ட நிலையில் திருவண்ணாமலையில் ஒரு பயிற்சி வகுப்பு நடந்தது. அதில் விளக்கப்பட்டவை அந்த அமைப்பையே இரண்டாகப் பிளவு செய்தது. ஒவ்வொருவரும் ஒரு தீவு போல் ஆனார்கள். தாய்த்தமிழ்ப் பள்ளிகளில் பயன்படுத்துவதற்கான பாடல்கள் தெளிதமிழிலும், ஈர்ப்புடையதாகவும் அந்த அகவையினருக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் என்ற நிலையில் தமிழகம் முழுவதும் உள்ள படைப்பாளிகளைப் பாடல் எழுத ஊக்குவித்தேன். வந்த பாடல்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றை வரிசைப்படுத்தினேன். அதனைச் சுற்றுக்கும் அனுப்பினேன். அரசின் பாராமுகம், ஏற்பிசைவு பெறுவதில் உள்ள சிக்கல்கள், பெற்றோர்களின் ஆங்கில விருப்பு என்பவற்றால் பல பள்ளிகள் தன் இருப்பையே இழந்தன. தற்பொழுது மிகச்சில பள்ளிகளே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

புதிய வெளிச்சமாக வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் மழலையர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்கிற விருப்பு மேலெழுந்து, இயங்குவதைக் கண்டேன். தொடர்பு கொள்ளும் பள்ளிகளுக்கு நான் கண்டறிந்தவற்றை அனுப்பி உதவி வருகிறேன். அவற்றை இணைய தளத்தில் இணைத்து வலையிறக்கிப் பயன்படுத்தவும் ஊக்குவித்து வருகிறேன்.

தற்பொழுது அமெரிக்காவில் புதியதாகப் பள்ளியைத் தொடங்கிய நண்பர் திரு அருள்ராஜ் மாணவர்கள் பாடுவதற்குரிய பாடல்கள் வேண்டும் என்று கேட்டார். அவரது விருப்பிற்கு இணங்க என் தொகுப்பில் இருந்தவற்றை வரிசைப் படுத்தி படவடிவக்கோப்பு ஆக்கி உள்ளேன். பள்ளிகள் இப்பாடல்களைப் பயன்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். இது குறித்துக் கருத்துகளை மின் அஞ்சல் செய்யுமாறும் வேண்டுகிறேன்.

அன்புடன் பொள்ளாச்சி நசன் - தமிழம்.வலை - பிப் 2014

pollachinasan@gmail.com, skype ID : pollachinasan1951, 97 88 55 20 61